# வெளிவாரிப் பட்டத்திற்கென பதிவு செய்த மாணவர்களிடமிருந்து பரீட்சைக்களுக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்

(A) பரீட்சை விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்.

1. தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் பரீட்சையின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடவும். (உ-ம்: First Year Examination in Bachelor of Arts)
2. தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வெளிவாரி அபேட்சகருக்கான குறிப்புப் புத்தகத்தில் காணப்படும் தங்களது பதிவு இலக்கத்தை உரிய குறியீட்டு எழுத்துடன் சரியாகக் குறிப்பிடவும். (உ-ம்: SEU/ES/07/AT/2345)
   - I. முதலெழுத்துக்களுடன் பெயரை எழுதவும் (உ-ம்: M.S. Sifan)
   - II. முழுப் பெயரை முறையாக சொற்களைப் பிரித்து எழுதவும் (உ-ம்: Mohamed Saleem Sifan)
3. தங்களது சரியான விலாசத்தையும் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கங்கள் இரண்டையும், மின்னஞ்சல் முகவரியையும் குறிப்பிடவும்.
4. (I) பாடத்தின் சரியான குறியீட்டையும் பாட அலகுகளையும் குறிப்பிடவும்.
   உ-ம்: 1. GGY 1.11 Fundamentals of Environmental Geography
   2. GGY 1.21 Introduction to Practical Geography
5. **பரீட்சை நிலையம்:**
   இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம் ஒலுவில், கண்டி ஆகிய நிலையங்களில் நடாத்தப்படும். கண்டி பரீட்சை நிலையத்திற்கு 250 மாணவர்களுக்கும் குறைவான விண்ணப்பங்கள் கிடைக்கும் பட்சத்தில் அப்பரீட்சை ஒலுவில் பரீட்சை நிலையத்தில் மாத்திரம் நடாத்தப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.
6. **பரீட்சைக் கட்டணங்கள்** - (கட்டணங்களைச் செலுத்தி உரிய விபரங்களைக் குறிப்பிடவும்)
   - I. பரீட்சைக் கட்டணம் எந்தவொரு மக்கள் வங்கிக்கிளையிலும், தென்கிழக்குப் பல்கலைக்கழக வங்கிக் கணக்கு இல: **228-1001-6000-1692**க்கு செலுத்திய பற்றுச் சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் கழராதபடி ஒட்டவும்.
     (வங்கிப் பற்றுச் சீட்டின் Photocopy ஒன்றினை தங்களுடன் வைத்திருப்பது நன்று)
   - II. வங்கிப் பற்றுச்சீட்டில் **Purpose/காரணம்** என்ற கூட்டினுள் பதிவிலக்கம், "Name of Examination: (Example: 1st Year Examination in BA)" ஆகியவற்றை தெளிவாக எழுதவும்.
   - III. ஒரு பாட அலகு (உ-ம்) BEN 1.11 , BEN 1.21 என்பன இரண்டு தனிப்பட்ட பாட அலகுகளாகும்) - ரூ. 500.00
     ஒன்பது பாட அலகுகளும் அதற்கு மேலும் - ரூ. 4500.00

   வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்த பின்பு உரிய இடத்தில் கையொப்பமிடவும்.

(B) வேறு அறிவுறுத்தல்கள்

1. இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையத்தில் அல்லது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் மூலம் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
2. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்படல் வேண்டும்.
   - I. குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டமைக்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டுதல்.
   - II. தங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி இடது பக்க மேல் மூலையில் பதிவு இலக்கத்தினையும் பரீட்சைக்குத் தோற்றுகின்ற ஆண்டினையும் எழுதி ரூபா 15.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 9''x4'' அளவிலான இரண்டு தபாலுறைகள் இணைத்து அனுப்பவும்.
   - III. அண்மையில் எடுக்கப்பட்ட தங்களது நிழற்பிரதி(Photo) ஒன்றினை விண்ணப்பத்தின் மேற்பகுதியில் காட்டப்பட்டுள்ள பெட்டியினுள் ஒட்டுதல் வேண்டும். அதன் கீழுள்ள சிறிய பெட்டியினுள் தங்களது ஒப்பத்தினை தெளிவாக இடல் வேண்டும்.
3. பரீட்சை விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தோற்றும் பரீட்சையின் பெயரையும் வெளிவாரி அபேட்சக பதிவு இலகத்தையும் தெளிவாகக் குறிப்பிடவும்.

4. பூரணப்படுத்தப்பட்ட பரீட்சை விண்ணப்பத்தை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திற்கு எதிர்வரும் 30.06.2014ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது நேரடியாகவும் ஒப்படைக்கலாம்.
   Assistant Registrar,
   Centre for External Degrees & Professional Learning (CEDPL),
   South Eastern University of Sri Lanka,
   Oluvil
5. மேலே குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு மாறாக அல்லது குறிப்பிட்ட தேவைகள் பூர்த்தி செய்யப்படாத அல்லது தாமதித்து கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
6. பரீட்சை அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு உரிய நேரத்தில் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.
7. பரீட்சைக்கு விண்ணப்பித்ததன் பின்பு பரீட்சையிலிருந்து விலகிக்கொள்ளும் பரீட்சார்த்திகள் தமது விலகல் மனுவினை எதிர்வரும் 20.07.2014ஆம் திகதி அல்லது முன்னர் வெளிவாரி பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையத்தில் (CEDPL) கிடைக்கச் செய்தால் தாம் செலுத்திய பரீட்சைக்கட்டணத்தில் 75% இனை மீளப்பெற்றுக்கொள்ள முடியும். இத்திகதியின் பின்னரான விலகல் மனுக்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.
8. பரீட்சைக்கட்டணம், கருத்தரங்குகளுக்கான கட்டணம் என்பன வெவ்வேறாக செலுத்தப்பட்டு இவ்விரு பற்றுச் சீட்டுகளும் உரிய விண்ணப்பங்களுடன் ஒட்டப்படல் வேண்டும். கருத்தரங்கிற்கான கட்டணம் செலுத்தாமல் பரீட்சைக்கட்டணம் மட்டும் செலுத்திய விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

   **கட்டண விபரம்**:

| ***விபரம்*** | ***பரீட்சைக்கட்டணம்*** |
|---|---|
| ஒரு பாட அலகு | 500.00 |
| ஒன்பது அல்லது அதற்கு மேல் | 4500.00 |

9. பரீட்சைக்கான கட்டணம் படிவம்-Iஇல் ஒட்டப்படல் வேண்டும். கருத்தரங்கிற்கான கட்டணம் படிவம்-IIஇல் ஒட்டப்படல் வேண்டும். (கருத்தரங்கிற்கான கட்டண விபரங்களை அவ்விண்ணப்ப அறிவித்தலில் பார்வையிடலாம்).
10. 2ஆம், 3ஆம் வருடங்களுக்கு மீள்பதிவு செய்த மாணவர்கள் மாத்திரமே பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர்.
11. 2005ம், 2006ம் ஆண்டுகளில் பதிவு செய்த மாணவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு முன் தங்களது பதிவினை நீடிப்பு செய்தல் வேண்டும்.

மேலும் இதுவரை மாணவர் பதிவுப் புத்தகத்தினைப் பெற்றுக்கொள்ளத மாணவர்கள் உங்களது பதிவுப் புத்தகத்தினை அலுவலக நாட்களில் பெற்றுக்கொள்ளமுடியும்.

மேலதிக தொடர்புகளுக்கு : 0672052801
இணையத்தள முகவரி : www.seu.ac.lk

உதவிப் பதிவாளர்
வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம் (CEDPL)
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
ஒலுவில்